From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 148/2015

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : சண்முகம் | Father/Husband Name | : செல்ல பெருமாள் |
| Age | : | Calling | : |
| Date | : 01.06.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 01 day of 06.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் உட்கோட்டம் காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.12.2005 ம் தேதி காலை 10.15 மணிக்கு மேலூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது மேலூர் காவல் நிலைய மனு எண் 715/2005 பார்வையிட்டு புகாரின்தன்மைகேற்ப வாதி நாகூர் திருவாதவூர் சமத்துவபுரம் என்பவர் கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 1470/2005 பிரிவு 147, 341, 323 இதசன்கீழ் வழக்கு பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அன்றையதினமே பகல் 11.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அப்துல் ரஹீம், மந்தைச்சாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் ஏற்கனவே அசாஆ 2 ஆக குறீயிடு செய்யப்பட்டுள்ளது. ( **மாதிரி வரைபடம் முறையே அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் சாட்சிகள் நாகூர், ரத்தினபேகம், ஜோதி, சேட், அப்துல்ரஹீம், மந்தைசாமி, தலைமை காவலர் ஹரிச்சந்திரன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கில் எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றையதினம் 30.12.2005ம் தேதி பகல் 12.00 மணிக்கு சமத்துவபுரம் பஸ் ஸ்டான்டில் வைத்து எதிரி கலையரசியை காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மேலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் முர்சிதா பேகம் ஆகியோரை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த காயச்சான்று முறையே 3 மற்றும் அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எனது புலன்விசாரணை முடித்து, சாட்சிகளின் வாக்குமூலம் ஆவணங்களிலிருந்து சட்டபிரிவுகளான 147, 341, 323 இதசவிலிருந்து 341, 323 ஆக எதிரிகள் கலையரசி, சண்முகம், அருள் ஆகியோர்களை தவிர மற்ற சாட்சிகளை நீக்கி அறிக்கை ஒன்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(அந்த சட்ட மாறுதல் மற்றும் எதிரி நீக்கல் அறிக்கை அசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது 13.02.2006 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

புகார்தாரர் சொன்னதுபோல் எந்த புகாரும் காவல் நிலையத்தில் வந்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று பார்வைமகஜர் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார்

செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.